RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s335

OPEN ACCESS

# ‘கானகன்’ புதினத்தில் சூழலுக்கிசைவான சமூக மாற்றங்கள்

**ஜீ.சு. ஜெமிமா ஜெயப்பிரியா** [அ, *]

[அ] தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை- 625002., தமிழ்நாடு, இந்தியா.

# Contextual Social Changes in the Novel 'Kanakan'

**J.S. Jemima Jeyapriya** [a, *]

[a] Tamil Research Centre, Lady Doak College, Madurai-625002, Tamil Nadu, India

* Corresponding Author: jemimajeyapriya@ldc.edu.in

Received: 19-04-2021
Revised: 29-04-2022
Accepted: 13-05-2022
Published: 16-07-2022

Check for updates

**ABSTRACT**

For many years, it has been known that various countries are facing the state of destruction of their forests, which are being destroyed in different ways. Apart from the destruction of forests through naturally occurring forest fires, forests are being encroached upon, destroyed, and destroyed and their area reduced for commercial resources like timber, minerals, cash crops, and hunting. Today, the world is faced with the need to recreate these forests and restore the environment conducive to the survival of biodiversity. Deforestation is similar to destroying ourselves. In this context, the works of fiction that deal with the forest, the wildlife, and the life and death struggle of the tribals in the forests, have only started to emerge in recent times. Lakshmi Saravanakumar's novel 'Kanagan' is one of the manifestations of that course of events. The novel has also proposed ways to protect the forest and every creature in it, which are important for the existence of the earth, and normal movement, apart from suggesting ways to protect them and foster social change.

**Keywords:** Kanagan, Lakshmi Saravanakumar, Environment, Social Change

## முன்னுரை

இருக்குமிடத்தின் இருப்பிற்குப் பங்கத்தை விழைவிக்காது வாழ்வதும், வாழ்க்கைக்கு ஆதாரமான இயற்கையைக் காப்பதும் மனிதரது கடமை என்கிற சிந்தனை இன்றைக்கு முன்னுக்கு வந்துள்ளது (Panchangam, 2011). பூமியின் இருப்பிலுள்ள வளமனைத்தையும் முற்றிலுமாகத் துய்த்துவிடத் துடித்துக்கொண்டிருக்கிற மனிதருக்கு, தானும் அனுபவித்து, எதிர்காலச் சந்ததிக்கும் ஆரோக்கியமான பூவுலகைக் கையளிக்க வேண்டும் என்கிற ‘பூவுலகின் காப்புத் தத்துவத்தைப் பரிந்துரைக்கிறதாக லக்ஷ்மி சரவணகுமாரின் ‘கானகன்’ புதினம் அமைந்திருக்கிறதை அறியலாம். புலி வேட்டையைப் பற்றிய கதையாக உருவாக்கம் பெற்றிருந்தாலும், மற்ற எல்லா வளங்களையும்விட அதிகமாய்க் கொள்ளைக்காட்படுவது மலைதான் என்பதை இப்புதினம் ஆணித்தரமாக அறிவுறுத்தி நீள்கிறது. தேனி மாவட்டத்தின் அகமலைக்காடுதான் இப்புதினத்தின் கதைக்களம். காடு, காட்டுயிர் குறித்த புரிதலையும், அவற்றைக் காப்பதன் அவசியத்தையும், அவற்றிற்கான மனிதர்களது அக்கறைச் செயல்பாடுகளையும், இயற்கையோடிணைந்த பளியர்களின் வாழ்வியல் விழுமியங்களையும் எடுத்துரைப்பதன்வழி, சூழலுக்கிசைவான சமூக மாற்றத்தை எதிர்நோக்கிய புதினமாகக் ‘கானகன்’ காட்சிப்படுகிறது.

## பளியர்களின் அறவாழ்வியல் முறைகள்

ஆண்டாண்டுக் காலமாய்க் காடுகளைச் சார்ந்தே வாழ்கின்ற தொல்குடியினரின் வாழ்வியலானது, இயற்கைசார்ந்த அறவாழ்வியல் மதிப்பீடுகளைக் கொண்டதாகக் காட்சிப்படுகிறதை

இப்புதினம் பதிவுசெய்துள்ளது. உணவுக்காக அன்றி எதற்காகவும் வேட்டையாடக்கூடாதென்பது அகமலைக்காட்டுப் பளியரின் மரபு. காட்டிற்கும் உயிர் இருக்கிறதென்பதால், தேவையைத் தாண்டி எதையும் எடுத்துக்கொள்ள நினைக்காதவர்கள் பளியர்கள். காட்டிலேயே காலங்காலமாய்க் கிடக்கிறவர்களுக்கு வேட்டையாடச் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை என்றாலும்கூட, அகமலைக்காட்டை எல்லாவிதங்களிலும் புனிதப்படுத்திப் பார்க்கிற அவர்களுக்குத் தாங்கள் வேட்டையாடும் எல்லாவற்றைக் குறித்தும் அச்சமிருக்கிறது. இதில் இடம்பெறுகிற செல்லாயி, ஒரு பளியர் இனப்பெண். வேட்டையாடுவதில் சிறந்தவள். அவளது கணவன் சடையன் காட்டை நேசிப்பவன். செல்லாயி சடையனை வேட்டைக்கு வற்புறுத்தி அழைக்கின்றபோது, "வேணாம்த்தா… நம்மளே இப்பிடி செஞ்சம்னா… நம்மளப் பாத்து பளியக்குடில இருக்க மத்தவுகளும் வேட்டைக்குப் போக ஆரம்பிச்சிருவாக… நம்ம வேல இந்தக் காடு அழிஞ்சிராம காக்கறதுதேன்" என்று காட்டைப் பாதுகாக்கிற பளியனாகவே காட்சிப்படுகிறான் இப்புதினத்தின் முக்கியக் கதைமாந்தரான சடையன் (Lakshmi Saravanakumar, 2014). சடையனின் மகன் வாசியும், காட்டிலிருக்கும் மரம், செடி, கொடிகளும், மிருகங்களும் பளியனைக் காத்து வாழ வைக்கின்றதால், பதிலுக்கு இந்தக் காட்டைக் காக்க வேண்டியது தன் வாழ்நாள் கடமை எனக் கருதுகிறான்.

பளியன் இந்தக் காட்டைக் காப்பதற்கென்றே காலங்காலமாய்ப் பளிச்சியால் அனுப்பப்பட்டவன் என்பதற்குச் சடையன் சிறந்த உதாரணமாகிறான். கிறுக்குப் பிடித்தவனைப் போலப் பிதற்றித் திரிகிறவனாகக் காணப்பட்டாலும், காட்டைச் சூறையாடுகிறவர்களுக்கு எதிராகக் காட்டின் காவலனாகச் செயல்படுகிறான். சடையன் ஒருபோதும் வேட்டையாட விரும்பாதவன். வேட்டையாடப்பட்டுச் சாகும் உயிரின் ஆத்மா இந்தக் காட்டில், தான் எதிர்கொள்ளும் அத்தனை ஜீவராசிகளோடும் சம்பந்தப்பட்ட ஒன்று என்பதால், அதைக் கொல்வதின் வேதனையை அவனால் கொண்டாடவோ, மகிழவோ எப்போதும் முடிந்ததேயில்லை.

பளியன், தனது ஒவ்வொரு நரம்பையும், எலும்பையும் இந்தக் காட்டோடு பிணைத்திருப்பவன் என்பதால், காட்டிலுள்ள மிருகங்களால் எப்பொழுதும் தங்களுக்கு எவ்வித ஆபத்தும் வரவிடாது பளிச்சி தெய்வம் தங்களைக் காத்துக் கொள்வதாக நம்புகிறான். இந்தக்காடு பளியனுக்குச் செய்யும் துரோகம், தனக்குத் தானே செய்து கொள்ளும் துரோகத்தைப் போன்றது என்கிறார் காட்டின் மூத்த பளியன் 'பூசணி'. பளியனின் உடல் ரேகையோடும், நரம்புகளோடும் சேர்ந்து பிணைந்த உணர்வு, பளிச்சியும், பாட்டாவும் (புலி) தெய்வங்கள் என்பதாகும். எனவே, பளியர் எவரும் பாட்டாவை வேட்டையாடமாட்டார்கள். இவர்களது உணர்வுகளைப் புரிந்துகொண்டதாலோ என்னவோ பாட்டாவும் இவர்களைத் தாக்கியதில்லை. பளியர்களின் வயல்களுக்குள்ளோ, குடில்களுக்குள்ளோ ஒருநாளும் மிருகங்கள் அத்துமீறுவதில்லை. அதையும் மீறி அட்டகாசம் செய்யும் மிருகங்களைப் பளியன் தொந்தரவு செய்வதில்லை. ஒன்று அம்மிருகம் பெரும்பசியில் இருக்க வேண்டும் அல்லது கிறுக்குப் பிடித்துப் போனதாய் இருக்க வேண்டுமென மன்னித்துவிடுவர். தன்னைத் தொந்தரவு செய்யாதவரை, உண்மையில் இந்த வனம் யாரையும் தொந்தரவு செய்வதில்லை என்பதை நன்கு புரிந்தவர்கள் இவர்கள். இந்தக் காடு இவர்களின் வாழ்வாதாரம் மட்டுமன்று இவர்கள் இந்தக் காட்டை நம்பியிருப்பது போலவே இந்தக் காடும் இவர்களை நம்பித்தான் இருக்கிறது. பளியனும் இந்த வனமும் தனி உலகம் இரண்டில் ஒன்று பிரிந்தால் இன்னொன்று வெகு காலத்திற்கு ஜீவித்திருக்காது என்று இப்புதினத்தின் படைப்பாளி லக்ஷ்மி சரவணகுமார் குறிப்பிடுகிறார்.

தன் குழந்தையைப் பிரசவிக்கும் பளிச்சி, அவளாகவேதான் பிரசவம் பார்த்துக் கொள்ள வேண்டும். மூன்று நாட்களுக்கு யாரும் அவளையும் அவள் பிள்ளையையும் தொடமாட்டார்கள். தன் குழந்தையின் தொப்புள்கொடி அறுக்கிறவள் அந்தக் குழந்தையை முதலில் காட்டுவது இந்தக் காட்டிற்குத்தான். பளியன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே காட்டின் வாசனை அறிந்தவனென்பதால், குழந்தையானது தானிருக்கும் இடத்தை எளிதில் கண்டு கொள்ளும். அப்படிப் பிறந்து, வளர்ந்து, மடிந்துபோன பளியரின் ஆன்மா இக்காட்டை விட்டு எங்கும் போவதில்லை என்பதும், பளியர்களின் மலைத்தெய்வமான பளிச்சி, இந்தக் காட்டோடு என்றென்றைக்குமாக வாழ அனுமதித்திருக்கிறாள் என்பதும் இவர்களது நம்பிக்கையாகயிருக்கிறது. பளியன்களின் ஆத்மா மட்டுமன்று இந்தக் காட்டிலிருக்கும் அத்தனை உயிர்களின் ஆத்மாக்களும் மரங்களில்தான் காலா காலத்திற்கும்

சேமிக்கப்படுகின்றன என்பதில் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். "பழங்குடிகளைப் பொறுத்தவரை அவர்கள் வாழ்கின்ற இடம் மிகவும் முக்கியத்துவமுடையது. அந்த இடத்தில் மூதாதையர்கள் வாழ்கிறார்கள் என்றும், முன்னோர்களது ஆவி அவர்களை ஆசீர்வதிக்கும் என்றும் தீவிர நம்பிக்கை கொண்டவர்கள்" என்கிற ஜனகப்ரியாவின் கூற்று, பளியர்களைப் பொறுத்தவரை அதி உண்மையாகிறது (Jegapriya, 2014).

காட்டுக்குள் வேட்டையாட வந்திருக்கிற ஜமீனுக்காக, பளிச்சி பூசை நடத்த பளியன் ஒருவனைத் தேடி வந்திருக்கிற இப்புதின மாந்தரான அன்சாரிக்கு, 'இது வேட்டைக்கான காலமன்று அதோடு, எல்லா மிருகங்களுக்கும் இனவிருத்தி செய்கிற காலமாகையால், தற்போது வேட்டைக்குச் செல்வது நல்லதில்லை' என்று இதில் இடம்பெறும் பூசணி என்பவர் எச்சரிக்கிறார். பளியர்களின் இத்தகைய அறம்சார்ந்த வாழ்வியல் முறைகள், சூழலுக்கிசைவான தனி மனித, சமூக மாற்றத்தை வலியுறுத்துகிறதாக அமைந்திருக்கிறதை இனங்காண முடிகிறது.

## சூழலைப் பற்றிய புரிதலறிவு பெறல்

ஒரு காட்டைக் குறித்த புரிதலை உண்டாக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளதுதான் இப்புதினம். ஒருவர் தான் நினைத்த மாத்திரத்தில் ஒரு காட்டைச் சுற்றி வந்துவிடவோ, தெரிந்து கொண்டுவிடவோ முடியாது. ஒவ்வொரு காலகட்டத்திற்கும் அக்காடு என்னவாய் இருக்கிறதென்பதை அதனோடேயே இருந்து கவனிக்க வேண்டும். ஒருவராலும் விலக்க முடியாத நீண்ட மௌனமும் நிதானமும் ஒவ்வொரு காட்டுக்கும் உண்டு. அத்தகைய நிதானம் கொண்ட மானுடர்களுக்கு மட்டுமே காட்டின் தடம் புரியும் என்கிறது இப்புதினம். இதில் இடம்பெறும் பளியனான சடையனின் மகன் வாசிக்கு, தம் காட்டிலுள்ள மிருகங்கள் திடீரென ஏன் இத்தனை மூர்க்கமாய் நடந்துகொள்கின்றன என்பது புரியாமலேயே இருந்தது. காட்டில் குடியேறிய மக்களையும், அவர்களது கால்நடைகளையும், அவர்களது கஞ்சாத் தோட்டங்களையும் மிருகங்கள் வேட்டையாடத் தொடங்கியதன் காரணம் பிடிபடவில்லை. மிருகங்களின் தேவைக்கான நீரும், உணவும், மனிதர்கள் காட்டை ஆக்கிரமித்ததன் காரணமாக, தடம் மாறியதே என்பதைக் கட்டையன் மூலம் பின்பு உணர்ந்துகொள்கிறான். வஞ்சிக்கப்பட்ட அந்த யானைகளுக்கானதே இந்தக் காடு இங்கு மனிதர்கள்தாம் அத்துமீறி நுழைந்திருக்கிறார்கள் என்பது புரிந்ததும், வாசி இழப்புகளுக்காக வருத்தப்படுவதை நிறுத்திக் கொள்கிறான். இன்றும்கூட, மனிதர்களது குடியிருப்புகளை விலங்குகள் சேதப்படுத்துவதாகச் செய்திகள் நாளிதழை நிறைத்த வண்ணம் இருக்கின்றன. ஆனால், மிருகங்களுடைய வாழிடங்களும், வழித்தடங்களும் மாற்றப்பட்டும், மறைக்கப்பட்டும் போனதுதான் இதற்கான காரணம் என்பதைக் குறித்த புரிதலுணர்வில்லாத சமூகமாக, மனித சமூகம் காணப்படுகிறதை இந்தப் புதினம் சுட்டிக்காட்டுகிறது.

## சூழல் குறித்து அக்கறை கொள்ளுதல்

அகமலைக்காட்டில், ஒரு கரட்டுக்குக் கீழே ஏழெட்டுக் குட்டிகளை ஈன்றிருந்த ஒரு தாய்ப்பன்றி நீண்ட நேரமாய் முனகிக் கொண்டிருக்கும் சத்தத்தைக் கேட்கிறான் இப்புதினத்தில் இடம்பெறுகிற சடையன். அதன் ரத்த வாடைக்கு வேறு மிருகங்கள் எதுவும் பக்கத்தில் வந்துவிடக் கூடாதென்பதற்காகக் கரட்டின் மேட்டிலேயே இரவு முழுவதும் காவல் காத்துக் கொண்டிருக்கிறான். மேலும், நரிகளை நோக்கி ஆவேசமாய் கத்துவதும் ஊளையிடுவதுமாய் இருக்கிறான். விடியும் வரை அவன் அசரவில்லை. மாறி மாறிப் பந்தங்களைக் காட்டிச் சுற்றுவதும் ஊளையிடுவதுமாய் மேட்டிலேயே நிற்கிறான். இது, 'தான் சார்ந்திருக்கிற காட்டைக் காப்பது தன் கடமை' என்கிற, காடு குறித்த அவனது அக்கறை உணர்வைப் பிரதிபலித்துக் காட்டுகிறதாயிருக்கிறது. இதன்வழி, தான்சார்ந்திருக்கிற இயற்கைச் சூழலை அக்கறையோடு பேணிக் காப்பதற்கான விழிப்புணர்வை மனித சமூகம் பெற வேண்டுமென்பதை இப்புதினம் வலியுறுத்துகிறதாக அறியலாம்.

## சூழலைக் காப்பதற்கு முனைப்பு காட்டுதல்

பொழுதுபோக்கிற்காகக் காட்டுயிர்களை வேட்டையாடத் துடிக்கிற ஜமீன்தாருக்கு, வழித்துணையாகப் போக வேண்டிய கட்டாயச் சூழல், வாசிக்கு ஏற்படுகிறது. காட்டுயிர்கள், ஜமீன்தார் போன்ற நாட்டு மிருகத்திடம் பலியாக்கப்படுவதை அவன் விரும்பவில்லை. முடிந்தவரையிலும் ஒரு சின்ன காட்டுக்கோழியைக்கூட அன்றைய தினம் சாகவிட்டுவிடக் கூடாதென்கிற தவிப்போடு செயல்படுகிறான் அவன். யாருக்கும் எந்தப் பதிலும் சொல்லாமல் நடந்து, அவர்கள் புறப்பட்ட இடத்தின் எதிர்முனைக்கே அவர்களைக் கூட்டி வருகிறான். எந்த மிருகமும் அவர் கண்ணில் படாத இடமாகவே அழைத்து வந்து, அலைக்கழித்து சோர்வடையச் செய்கிறான். இறுதியில் பெருங்கோபத்தோடு, எதிர்ப்படும் எந்த மிருகமாயினும் வேட்டையாடியே தீர வேண்டும் என்று வெறி கொள்கிறார் ஜமீன்தார். அச்சமயம், சினை மான் ஒன்று, அவரது பார்வையில் அகப்பட, சினையாக இருக்கிறதைக் கருத்திற்கொள்ளாது சுட்டுவிடுகிறார். அவரது செயலானது வாசிக்குப் பெருத்த வேதனையையளிக்கிறது. ஓடிச் சென்று, உயிர்விட்டுக்கொண்டிருக்கிற மானின் வயிற்றைக் கிழித்து, அதன் மடியிலுள்ள குட்டியை உயிரோடு எடுத்து, தானே பாதுகாப்பாய் வளர்க்கிறான். வாசியின் இச்செயல்பாடு, தனக்கு உணவளித்து, தன்னைப் பாதுகாக்கிற காடும், காட்டுயிரும் அழியக்கூடாது என்கிற சூழல் காப்புணர்வின் வெளிப்பாடுதான் என்பதை இப்புதினம் காட்சிப்படுத்துவதிலிருந்து உணரமுடிகிறது.

## இயற்கையின் சமநிலையைக் காப்பதன் அவசியத்தை உணர்தல்

இயற்கையின் சமநிலையானது காக்கப்பட வேண்டியது என்பது இன்றளவில் மிகவும் அவசியமாகிறது. காரணம், அனைத்துயிர்களின் வாழ்வாதாரம் என்பதே இப்பூமிதான். புவிக்கோளத்திலுள்ள ஒவ்வொன்றும் வேறு ஒவ்வொன்றோடும் தொடர்புடையதாகவே இருக்கின்றன. இவற்றுள் ஏதேனும் ஒரு கண்ணி அறுபட்டாலும், மொத்த வலையுமே சிக்கலுக்குள்ளாகும். எனவேதான், 'அனைத்துயிர்களுக்குமானது தான் இப்புவி' என்று சூழலியலாளர்கள் அறிவுறுத்திக்கொண்டே இருக்கின்றனர். "புலி இல்லைன்னா என்னாகும்னு தெரியுமா? மான், ஆடு, மாடு எல்லாம் பெருத்துப் போயி காட்டுல பச்சையே இல்லாமப் போகும். புலி, சிங்கம், சிறுத்தை, யானை எல்லாம் இருந்தாத்தான் நல்ல காடு. இது எதும் இல்லாத காடு வெறும் தோப்புதான். கொஞ்ச காலத்துல வெறும் பொதர்க்காடாத்தான் இருக்கும்" என்று உயிரினங்களின் சமநிலையைக் காப்பதன் அவசியத்தை எடுத்துரைக்கிறது இப்புதினம். "நமக்கிருப்பது ஒரு பூமி நம் வாழ்வின் முதல் முழு ஆதாரமும் இதுதான். இதைச் சீரழிப்பது நம் வாழ்வின் இறுதிநிலையாகி விடும்" என்கிற சூழலியலாளரின் கருத்தை வலியுறுத்தும் விதமாக இப்புதினம் அமைந்திருக்கிறதைக் அறியலாம் (Subrabharathimanian, 2014).

## சூழலுக்கிசைவான தனிமனித மாற்றம்

அகமலைக்காடு ஆக்கிரமிக்கப்படுகிறதை வாசியால் சகிக்கவே முடியவில்லை (Nakkheeran, 2013). இவன், 'எனக்கு முன்னால் என் இனம் இங்குதான் விருத்தியானது. எனக்குப் பின்னால் வரும் சமூகமும் இங்குதான் விருத்தியாக வேண்டும்' என்ற உறுதியோடு, காட்டுக்குள்ளிலிருந்தே, காடு ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராகச் செயல்பட முனைகிறான். இந்தக் காட்டிலிருக்கும் மரம், செடி, கொடிகளும், மிருகங்களும்தாம் பளியனைக் காத்து வாழ வைக்கின்றன. பதிலுக்கு இந்தக் காட்டைக் காக்க வேண்டியது தன் வாழ்நாள் கடமை எனக் காட்டைக் காக்கப் பொறுப்பேற்று உறுதிமொழிகிறான் வாசி. 'என் முன்னோர்கள் வாழ்ந்த பூமி இது என் பின் சந்ததி வாழப் போகிற பூமி இது' என்கிற வாசியின் உணர்வெழுச்சியையும், தான் சார்ந்திருக்கிற சூழலைக் காப்பது தனிமனிதக் கடமை என்கிற பொறுப்புணர்ச்சியையும் ஒவ்வொரு தனிமனிதரும் தமதாக்க வேண்டும் என்பதை இப்புதினம் வலியுறுத்துகிறது.

## இயற்கையோடு நேயங்கொள்ளல்

அகமலைக்காட்டை நேசிக்கிற சடையன், அக்காட்டை நன்கு புரிந்து வைத்திருக்கிறான் அக்காடும் அவனைப் புரிந்து வைத்திருக்கிறது. காட்டின் மொழி அவனுக்குப் புரிந்ததாலோ என்னவோ, அவனது பேச்சு பலருக்கும் புரிவதேயில்லை. இந்தக் காட்டில் அவன் எப்போது சாப்பிடுகிறான், எப்போது உறங்குகிறான், எங்குப் போகிறானென்பது பளிச்சியம்மனுக்கு மட்டுந்தான் தெரியும். எந்த மிருகமும் அவனை இதுவரை எதுவும் செய்ததில்லை. அவன் மனிதர்களே புரிந்துகொள்ள முடியாத ஒரு தனித்துவமான, மனித ஜென்மமாகவே காணப்படுகிறான். சடையனைப் பொறுத்தவரைத் தன்னைக் காட்டின் காவலனாகவே பாவித்திருக்கிறவன். அகமலைக்காடானது இருக்கும் காலம் வரையிலும், தன் ஆன்மா இக்காட்டில் இருக்கும் என்ற நம்பிக்கை கொண்டவன். தான் இறந்த பின் தன்னுடலைப் பறவைகளுக்கு இல்லாமல் மிருகங்களே தின்ன வேண்டுமெனவும் விரும்புகிறான். பறவைகள் ஒரு வகையில் நாடோடிகள் அவற்றுக்கு நிரந்தர இடமில்லை. இந்தக் காட்டைச் சேராத ஒருவருக்குத் தன்னுடலைத் தர சடையனுக்கு விருப்பமில்லை. தன்னைத் தின்னும் மிருகம் இந்தக் காட்டில் வாழ வேண்டும். அந்த மிருகத்தின் உடலில் புகுந்து கொண்ட பின்னும், தன் ஆன்மா இந்தக் காட்டையே சுற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்பதே சடையனின் விருப்பம். காட்டுயிர்களோடு அவன் கொண்ட உறவு, அவனது உறவினர்களைப் பிரிந்து, உயிரினமோடு உயிரினமாய் வாழ அவனைப் பழக்கிவிட்டிருக்கிறது. காட்டிலுள்ள அனைத்துயிர்களோடும் அணுக்கத்தோடு வாழ்பவனே இந்தச் சடையன். காடு, மனித வேட்டைக்கு ஆட்பட்டதால், பாதிக்கப்பட்ட மிருகங்கள் மூர்க்கவெறி கொண்டு, அனைத்தையும் அழிக்க முற்படுகையில், சடையன், யானைத் தலைவனின் முதுகில் அமர்ந்தவனாய்க் காட்டில் உலா வந்து, அதன் ஆக்ரோசத்தைத் தவிர்த்து, பளியரைப் பாதுகாக்கிறான். காட்டின் ஒவ்வோர் அணுவிலும் தன்னைப் பிணைத்துக் கொண்டவனாக இந்தச் சடையன் காட்சிப்படுகிறதை இப்புதினம் எடுத்துக்காட்டுகிறது. தன்னை நேசிப்போரை இயற்கை ஒருபோதும் கைவிடுவதில்லை என்பதைச் சடையனின் செயல்வழி வெளிப்படுத்துகிறார் படைப்பாளி.

## நுகர்வெனும் பெரும்பசியும் பேரழிவும்

மனிதருக்கு இயற்கையிலிருந்து எடுத்துக்கொள்ளத் தணியாத ஆசையானது இருந்துகொண்டேதான் இருக்கிறது. இயற்கையின் வளங்களைக் காணுகிறபோதெல்லாம், அவற்றிலிருந்து எடுத்துக்கொண்டே இருக்க வேண்டுமென்கிற மனிதரின் பேராசைதான், பலவித சுற்றுச்சூழற் சிக்கல்களுக்கான தோற்றுவாயாக அமைந்தது என்பதை இப்புதினம் குறிப்பிடுகின்றது. காடுகள் முதலில் வேட்டைக்களமாகி, பின்னர் கஞ்சாத்தோட்டமாகி அடுத்ததாக, பணத்தை விளைவிக்கிற வியாபாரக்களமான பின்னணியை விரிவாகப் பேசுகிறது. “மனிதனின் அகோரப் பசியும் பேராசையும்தான் இவ்வுலகின் மிக மோசமான ஆயுதங்கள். இந்த இரண்டும்தான் எல்லா யுத்தங்களுக்கும் மனிதர்களைத் தயார்படுத்திவிட்டன” என்பதைக் கவனப்படுத்துகிறதாயும் இப்பிரதி அமைந்திருக்கிறது (Lakshmi Saravanakumar, 2014).

அகமலைக்காட்டில் கஞ்சாத்தோட்டம் உருவாக்கப்பட்டதும், அதில் வேலை செய்வோர் பெருகுகிறதைப் போலவே, அவர்களுக்கான இருமல் மற்றும் சுவாசப் பிரச்சினை நோய்களும் கூடவே பெருக, அவற்றைத் தீர்ப்பதற்காக முதலில் மருத்துவர்கள், அவரைத் தொடர்ந்து பின்பு மருத்துவ முகாம்கள் எனச் சிறுகச் சிறுக காடு முழுவதும் மனிதரது ஆக்கிமிப்புக்குள்ளாகிறது. மேலும், கஞ்சாத் தோட்டங்களைச் சேதப்படுத்துகிற யானைகளையும் பிற மிருகங்களையும் வேட்டையாடுகிறதற்காகத் தங்கப்பன் என்பவனை, ஒரு கஞ்சாத்தோட்ட முதலாளி அணுகுகிறபோது தங்கப்பன், வனத்துறையினரின் கண்காணிப்பை எண்ணியும், அவர் குறிப்பிடும் பகுதி கேரள வனத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ளதாலும் முதலில் தயங்குகிறான். அதைப் புரிந்து கொண்ட முதலாளி, “யோவ் மனுஷப்பயலப் பத்தி நீ ஏன் கவலப்படற? காசு கொடுக்கறென்னு சொன்னா எவன்னாலும் குனிஞ்சு நிப்பான். அதப் பத்திக் கவலப்படாத.... எக்கச்சக்கமா காச இந்தக் காட்டுக்குள்ள போட்றுக்கேன். அம்புட்டு சீக்கிரத்துல விட்டுற மாட்டேன்” என்கிறார் (Lakshmi Saravanakumar, 2014). இது, ஒரு காடு காடாகப் பார்க்கப்படாமல், போட்ட முதலை எடுப்பதற்கான வியாபாரக் களமாக ஆக்கப்பட்ட நிலையையே

உணர்த்துகிறது. கஞ்சாத்தோட்டத் தொழிலாளர்கள் அச்சமின்றி, பிழைப்பை நடத்துகிறதற்காக, காலங்காலமாய் வாழ்ந்து பெருகி, வளர்ந்து வருகிற காட்டு மிருகங்களைக் காட்டை விட்டே துரத்துகிற அவலத்தையும் இப்புதினம் நுட்பமாகச் சுட்டிக்காட்டுகிறது. தான் வாழ்வதற்காக, எதையும் உருவாக்கவும் அழிக்கவும் முனைகிற மனித இயல்பு, காட்டையே சூறையாடிடத் துணிகிறது. மனிதர் தனது ஆசைகளில் நிறைவுகொள்ள முடியாத பெரும் பசி கொண்ட மிருகமென்பதை இம்முதலாளி எனும் கதாமாந்தர் மூலமாய் இப்பிரதி சுட்டிக்காட்டுகிறது. தேவைக்கதிகமான மனிதரது நுகர்வு வெறியானது கிளையில் அமர்ந்து மரத்தை வெட்டிக்கொண்டிருக்கிற செயலுக்கு ஒப்பானது என்பதை எச்சரித்துணர்த்தி, சமூக மாற்றத்திற்கு வித்திடுகிறது எனலாம்.

## முடிவுரை

நடப்புக்காலச் சுற்றுச்சூழற் கேடுகளிலிருந்து இந்த உலகைப் பாதுகாக்க, சூழலுக்கிசைவான பண்புநலன்கள் என்பவை மிகவும் அவசியமாகின்றன. தேரின் மணியோசை, தேன்சிட்டுகளுக்குத் துன்பத்தைத் தரக்கூடாது என்கிற உணர்வோடு, மணிநாவை இழுத்துக்கட்டிய அகநானூற்றுத் தலைவனின் சூழலுக்கிசைவான பண்பை, நடப்புக்கால மனித சமூகம் என்றும் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்னும் சிந்தனையை இப்புதினம் பலவிதங்களில் வலியுறுத்துகின்றதை உணரலாம். மனிதர் செய்கிற செயல்கள் அனைத்தையும் இயற்கையானது ஏற்றுக்கொண்டு இணக்கமாக இருப்பதில்லை. அதால் சகிக்க முடியாமல் போகிறபோது, தன் நிராகரிப்பைப் பலவித இயற்கைச் சீற்றங்களின்வழிச் சமூகத்திற்குக் காட்டிக்கொண்டேதான் இருக்கிறது. இயற்கைச் சீற்றங்கள் எங்கோ, எவருக்கோ ஆபத்தை விளைவிக்கின்றதென்று, அவற்றைப் பார்த்தும், கேட்டும் கடந்துகொண்டிருக்கிற மனித சமூகம், மாற்றங்கொள்ள வேண்டும். சுற்றுச்சூழல் நெருக்கடிகளைப் பொறுத்தவரை, ஓரிடத்தில் ஏற்படுகிற சிக்கலானது, உலக வலைப்பின்னலின் பிறிதோரிடத்தில் நெருக்கடியை ஏற்படுத்த வல்லதாகின்றது. எனவே, உலகளவில் சுற்றுச்சூழற் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு முயற்சிக்காவிட்டாலும்கூட, தான் வாழ்கிற உள்ளூர் அளவிலாவது, சூழலின் சமனிலையைக் காக்க அக்கறை கொள்ள வேண்டும் என்பதையே இப்புதினம் வலியுறுத்துகின்றது.

## References


Jegapriya, (2014) Ularak Kanneer, Pulam Veeliyeedu, Chennai, India.

Lakshmi Saravanakumar, (2014) Kaanagan, Malaisol Pathippagam, Nilgiris, India.

Nakkheeran, (2013) Malai kaadukalin maranam, Poovulagin Nanbargal, Chennai, India.

Panchangam, K., (2011) Ilakiyamum Thiranaivu Kotpadugalum, Annam, Chennai, India.

Subrabharathimanian, (2014) Soozhal Aram, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License